# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 13.07.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 5615/SCIC/2024**

திருமதி.J. ஜெயா வெங்கட்ராமன் - மேல்முறையீட்டாளர்
பிளாட் எண்.2/17,
AGP Caste 17வது தெரு
டான்சி நகர், வேளச்சேரி
சென்னை - 600 042.
கைபேசி.9003129390.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
முதுநிலை வருவாய் அலுவலர்
மண்டலம் - 13,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண்.115, Dr.முத்துலட்சுமி சாலை,
அடையாறு, சென்னை-600 020.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **28.01.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 15.03.2024 |
| 3. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 27.04.2024 |
| 4. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பதில் | 09.10.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 28/01/2024 நாளிட்ட மனுவை The Public Information Officer, The Greater Chennai Corporation, Zone-13, No.31, Thiruvengadam Street, Bakthavachalam Nagar, Chennai-20 அவர்களுக்கு அனுப்பி,

அதில் "Kindly let me know how many street vendors are available at Dhandeeswaram Main Road, Dhandeeswaram Nagar, Velachery, Chennai-600 042." என்பன போன்று 12 (பன்னிரெண்டு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (13/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திருமதி.J. ஜெயா வெங்கட்ராமன் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.K.சக்திவேல்முருகன், முதுநிலை வருவாய் அலுலர், மண்டலம்-13, வருவாய் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, அடையார், சென்னை அவர்கள் நேரில் ஆஜராகி, மனுதாரருக்கு 23/02/2024 தேதியிட்டும், மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனுவிற்கு 09/05/2024 தேதியிட்டும், மீண்டும் 09/10/2025 தேதியிட்டு இனவாரியான பதில்களையும் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து அதன் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். **ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவிற்கும், மேல்முறையீட்டு அலுவலருக்கு பதிலாக பொதுத் தகவல் அலுவலரே 09/05/2024 தேதியிட்டு பதில் அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது. இந்நடவடிக்கை மிகவும் தவறானது, ஆணையம் இதனை ஏற்கவில்லை. மேல்முறையீட்டு அலுவலர் / செயற்பொறியாளர், மண்டலம்-13, பெருநகர சென்னை மாநகராட்சி, அடையார், சென்னை அவர்களை ஆணையம் எச்சரிப்பதோடு, இனி வருங்காலங்களில், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005-ன் விதிமுறைகளை முறையாக பின்பற்றி, மனுதாரர்களுக்கு பதில் அளிக்க வேண்டுமென அறிவுறுத்துகிறது. ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டும், நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 5615/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
முதுநிலை வருவாய் அலுவலர்
மண்டலம் - 13,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண்.115, Dr.முத்துலட்சுமி சாலை,
அடையாறு, சென்னை-600 020.

பொதுத் தகவல் அலுவலர் /
செயற்பொறியாளர்
மண்டலம் - 13,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண்.115, Dr.முத்துலட்சுமி சாலை,
அடையாறு, சென்னை-600 020.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திருமதி.J. ஜெயா வெங்கட்ராமன்
பிளாட் எண்.2/17,
AGP Caste 17வது தெரு
டான்சி நகர், வேளச்சேரி
சென்னை - 600 042.
கைபேசி.9003129390.

RG/Sr.PC